# இறவையிலும் பாசிப்பயறு..!



இறவைப் பாசனம் செய்யும் பெரும்பாலான விவசாயிகள், பயறு வகைகளை ஊடுபயிராக மட்டுமே சாகுபடி செய்கிறார்களே தவிர, தனிப்பயிராக செய்ய முன்வருவதில்லை. சிலர் மட்டும்தான் தனிப்பயிராக செய்து வருகிறார்கள். அந்த வகையில் தொடர்ந்து பயறு வகைகளை சாகுபடி செய்து வருகிறார் கரூர் மாவட்டம், சின்னதாராபுரம் அருகேயுள்ள அணைப்புதூர் கிராமத்தைச் சேர்ந்த மணி.

சாகுபடி முறை

கிணறோட இருக்கிற இருபது ஏக்கர் செம்மண் பூமியில் ஆயிரம் தென்னை மரம், நெல், கரும்பு, மஞ்சள், உளுந்து, நாட்டுச்சோளம், நிலக்கடலைனு மாத்தி மாத்தி சாகுபடி செய்து கொண்டிருக்கிறேன். கடலை அறுவடை முடிந்ததும் அரை ஏக்கரில் பாசிப்பயறு போட்டேன். பக்கத்துலயே அமராவதி ஆறு இருக்கிறதால் பம்ப்செட் மூலமாகவும் தண்ணீர் எடுத்துக்கலாம். ஆரம்பத்துல ரசாயன விவசாயம்தான். இப்பொழுது இயற்கை விவசாயம் செய்து கொண்டிருக்கிறேன். இதுவரைக்கும் உளுந்துதான் போட்டுக்கிட்டிருந்தேன். இந்தத் தடவைதான் முதல்முறையாக பாசிப்பயறு விதைத்தேன்.

பாசிப்பயறுக்கு மாசி, பங்குனி, சித்திரை ஆகிய பட்டங்கள் சிறந்தது. ஆடிப்பட்டத்திலும் சிலர் விதைப்பார்கள். ஆனால், அந்தப் பட்டத்தில் செடி வளர்ச்சி நன்றாக இருக்குமே தவிர, விளைச்சல் இருக்காது. நிலத்தைத் தேர்வு செய்த உடனேயே 1 டிராக்டர் கோழி எரு, 1 டிராக்டர் தொழுவுரம், 50 கிலோ வேப்பம்பிண்ணாக்கு, 1 கிலோ அசோஸ்பைரில்லம், 1 கிலோ பாஸ்போ – பாக்டீரியா ஆகியவற்றைக் கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். பின் நிலத்தை டிராக்டர் மூலமாக ஒரு முறை உழுது, இந்த உரக் கலவையை ஏகத்துக்கும் கொட்டி நன்றாக நிரவி சமன்படுத்த வேண்டும். பிறகு, மீண்டும் இரண்டு முறை உழவு செய்ய வேண்டும். இரண்டாவது தடவை டிராக்டர் உழுது கொண்டிருக்கும்போதே பின்னால் பாசிப்பயரைத் தூவி விதைக்க வேண்டும்.

அரை ஏக்கருக்கு 3 கிலோ பாசிப்பயறு விதைகள் தேவைப்படும். பின் மட்டப் பலகையால் சமப்படுத்தி, விதைகளை மண் மூடும்படி செய்ய வேண்டும். பிறகு, 4 அடிக்கு 4 அடி இடைவெளியில் சொட்டுநீர்ப் பாசனம் அமைத்துக் கொள்ள வேண்டும் (பெரும்பாலும் மானாவாரியில்தான் பயறு வகைகளை செய்வார்கள். இறவை என்பதால் சொட்டுநீர்ப் பாசனம் சிறந்தது.

சொட்டுநீர் மூலம் நிலம் குளிரும் வரை (8 மணிநேரம்) தண்ணீர் விடவேண்டும். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை பாசனம் செய்தால் போதுமானது. வாரத்துக்கு ஒரு முறை பாசனநீரில் பத்து லிட்டர் பஞ்சகவ்யாவை வடிகட்டிக் கலந்து விட வேண்டும். மீண்டும் தேவைப்பட்டால், ஒரு களை எடுக்கலாம். மூன்று கிலோ வேப்பங் கொட்டைகளை, 10 லிட்டர் நீரில் இரண்டு நாட்கள் ஊற வைக்க வேண்டும். அதைத் தெளிய வைத்து, தெளிந்த திரவத்தை முதல் களை எடுத்த பின் பாசனநீரில் கலந்து விட வேண்டும். இது வேர்ப்புழுவைக் கட்டுப்படுத்தும். ஏற்கனவே தொழுவுரத்தோடு வேப்பம் பிண்ணாக்கு கலந்து விடுவதால், வேர்ப்புழு, தண்டுத் துளைப்பான் ஆகியவற்றின் தாக்குதல்கள் இருக்காது. அதையும் மீறி வந்தால், இந்த திரவத்தைத் தெளிப்பான் மூலம் கட்டுப்படுத்திவிடலாம்.

40-ம் நாளுக்கு மேல் பூ எடுக்கத் துவங்கும் சமயத்தில் பூச்சித் தாக்குதல் இருந்தால், 100 மில்லி அரப்பு மோர்க் கரைசலை (5 கிலோ அரப்பு இலையை லேசாக இடித்து, 5 லிட்டர் பசுமோரில் 15 நாட்கள் ஊற வைத்து வடிகட்டிய கரைசல்), 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இதன் மூலம் அனைத்து வகைப் பூச்சிகளும் கட்டுப்பட்டு விடும். இதையும் மீறி காய்ப்புழுக்கள் தென்பட்டால் பத்து லிட்டர் நீரில் 300 மில்லி பொன்னீம் கரைசலைக் கலந்து தெளிக்கலாம்.

70-ம் நாளுக்கு மேல், 80-ம் நாளுக்குள் பாசிப்பயறு அறுவடைக்குத் தயாராகி விடும். பயறை களத்தில் காய வைத்து, டிராக்டர் மூலமாக தாம்பு அடித்து, புடைத்து எடுத்து வைத்து விற்பனை செய்யலாம். எஞ்சும் செடிகள், பொட்டுக்கள் ஆகியவற்றைக் கால் நடைகளுக்கு உணவாகக் கொடுக்கலாம். அரை ஏக்கரில் குறைந்தபட்சம் 300 கிலோ வரை மகசூல் கிடைக்கும். தற்போதைய நிலவரப்படி கிலோ 100 ரூபாய் வரை விலை போகிறது.

எந்த விளைபொருளையுமே முடிந்தளவுக்கு இருப்பு வைத்து, விலை ஏறுகிற சமயத்துல விற்கலாம் அல்லது மதிப்புக் கூட்டி விற்கலாம்.